செய்தி வெளியீடு எண். 144 நாள்: 14.03.2018

# செய்தி

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி 69-வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மரம் வளர்ப்பு திட்டத்தின் கீழ் 2017-18-ம் ஆண்டில் திருவள்ளூர் வனக்கோட்டத்தின் மூலமாக 16,129 மரக்கன்றுகள் உற்பத்தி செய்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டது.

இதன் தொடர் நிகழ்ச்சியாக 2018-2019-ம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் 70-வது பிறந்த நாளை முன்னிட்டு 70 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய தமிழக அரசால் திட்டமிடப்பட்டு, அதன்படி மாண்புமிகு பாரத பிரதமா் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சா் அவா்களால் 24.02.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக மாபெரும் மரம் வளர்ப்பு திட்ட பணியினை திருவள்ளூர் மாவட்டத்தில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சா் திரு.பா.பெஞ்சமின் அவா்கள், மற்றும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி கலைப்பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சா் திரு.க.பாண்டியராஜன் அவா்களது தலைமையில் திருவள்ளூா் மாவட்ட ஆட்சி தலைவா், திருவள்ளூா் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளா், மற்றும் திருவள்ளூா் வனக்கோட்ட மாவட்ட வன அலுவலா் முன்னிலையில் மாபெரும் மரகன்றுகள் நடும் பணிகள் இன்று 14.03.2018 மாவட்ட ஆட்சியரின் பெருந்திட்ட வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**